# ராணுவத்தின் நாசகார செயல்கள் குறித்து மக்கள் விழிப்புடனிருக்க வேண்டும் - பொற்கோ

(யாழ்ப்பாணம்)
ஸ்ரீலங்கா இராணுவத்தின் திட்டமிட்ட நாசகாரச் செயல்களுக்கு தடைமுகாமை தாண்டிவரும் பொதுமக்க ளும் வியாபாரிகளும் ஆளா காது விழிப்புடனும் அவதா

[4ம் பக்கம் பார்க்க]

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE· EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஐப்பசி 15 இதழ் 263
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 31 — 10 — 1992

## கரிநாள் கலகம்:
## 10 பேர் நீதிமன்றில் ஆஜர்; நகைகளும் மீட்பு

(கொழும்பு)
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கி ரஸினால் ஏற்பாடு செய்யப் பட்ட 'கரிநாள்' அனுஷ்டிப் பின்போது கொழும்பு பண்

(4-ம் பக்கம் பார்க்க)

## புனித யுத்தத்துக்கு முஸ்லிம்கள் தயாராகும்

(கொழும்பு)
புனித யுத்தம் ஒன்றுக்கு முஸ்லிம்கள் இப்போது தயார் நிலையில் அணி திரண்டுள்ள னர். முஸ்லிம் மதப்பிரதி நிதிகளை உள்ளடக்கிய அதி உயர் அமைப்பான ஜாமியா

(4-ம் பக்கம் பார்க்க)

### எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில்

# பிரேமதாஸாவைத் தோற்கடிக்க கூட்டு எதிர்க்கட்சி முன்னணி!

## சிறிமா தலைமையில் துரிதமாக உருவாகிறது

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் ஆர். பிரேமதாசாவை தோற்கடிப்பதற்கு எதிர்க்கட்சிகள் அனைத்தும் கங்கணம் கட்டியுள்ளன, இதன் பொருட்டு எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து கூட்டு எதிர்க்கட்சி முன்னணி ஒன்றை அமைக்கத் திட்ட மிட்டுள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி கம் யூனிஸ்ட்கட்சி, லங்கா சமசமா ஜக்கட்சி, தேச விமுக்தி பெர முன, ஸ்ரீலங்கா மக்கள் கட்சி ஜனநாயக ஐக்கியதேசிய முன் னணியும் ஆதரவு வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் இந்த முன்ன ணியை அமைப்பதற்குத்

லலித்-காமினி தலைமையிலான பின் ஒரு பிரிவு ஆகியவை ஒன்றிணைந்து இந்த முன் னணியை அமைக்கவுள்ளன.

(4ம் பக்கம் பார்க்க)


## குறிப்பிட்ட ஒரு இனத்துக்கு தனி ராணுவம் அமைக்கும் கோரிக்கை தற்கொலை போன்றது!

(கொழும்பு)
இலங்கையில் வாழும் குறிப்பிட்ட ஒரு இனத்துக்கு தனி இராணுவம் அமைக்கப் படவேண்டும் என்ற கோரிக்கை தற்கொலைக்குச் சமமானது என்று ஸ்ரீலங்கா மக்கள் காங்கிரஸ் என்ற புதிய கட்சியின் தலைவர் ஏ. எச். டி. அமீர் தெரிவித் துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

தமிழர், முஸ்லிம்கள், சிங் களவர் தமக்கு தனி இரா ணுவம் அமைக்கப்படவேண்டு மென்று கேட்டு அந்தக்

(4ம் பக்கம் பார்க்க)



ஓமந்தையில் ஸ்ரீலங்கா இராணுவத்தால் வெடிக்க வைப்பதற்கு கொடுக்கப் பட்ட அமுக்கக் கண்ணிவெடியை படத்தில் காணலாம். இதில் இரண்டு பொலித் தீன் பைகளில் அதிஉயர் சக்தி கொண்ட வெடிமருந்து (சி 4), ஊக்கி (பூஸ்டர்), மரத்திலான பெட்டி, 2 சிறிய பென்ரோச் பற்றறிகள் காணப்படுகின்றன. மின் சாரக் கேற்பு பாதுகாப்புக்காரணங்கள் நிமித்தம் அகற்றப்பட்டுள்ளது.

## படை அதிகாரிகள் மனஉறுதி இழப்பு

(கொழும்பு)
வடக்கு-கிழக்கு யுத்தத்தில் படைத்தளபதிகள் நம்பிக்கை யும் மனஉறுதியும் இழந்து வருகின்றனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவர் திரு சி வி குண ரட்ண அண்மையில் நாடாளு மன்றத்தில் இவ்வாறு தெரி

(4-ம் பக்கம் பார்க்க)

### சிங்கள மீனவர்
## புலிகளால் விடுதலை இல. வானொலி தகவல்

(கொழும்பு)
விடுதலைப்புலிகளால் கடந்த 10 மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்த திருமலை யைச் சேர்ந்த மூன்று இளம் சிங்கள மீனவர்களை புலிகள் விடுதலை செய்துள்ளதாக இல

[4ம் பக்கம் பார்க்க]

## ராவ்- தமிழ்நாட்டு விஜயம் திடீரென ரத்து!

(சென்னை)
தமிழ்நாட்டுக்கு எதிர்வரும் 4-ம் திகதி விஜயம் செய்ய விருந்த பிரதமர் நரசிம்மராவ் தமது விஜயத்தை திடீரென ரத்துச் செய்துள்ளார்.

தமிழ்நாட்டில் உள்ள அர

(4-ம் பக்கம் பார்க்க)

## வலி. மேற்கு பகுதி மீது மீண்டும் ஷெல் தாக்கு

(பண்டத்தரிப்பு)
நேற்று முன் தினம் இரவு 10-30 மணியளவில் பலாலி இராணுவ முகாமிலிருந்து வலி மேற்கு பகுதியைநோக்கி பலத்த ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

சுழிபுரம், சில்லாலை, பண் டத்தரிப்பு பகுதிகளில் இந்த

(4-ம் பக்கம் பார்க்க)

## மருந்தாளருக்கு புதிய சம்பளத்திட்டம்

(பண்டத்தரிப்பு)
சுகாதார மகளிர் விவகார அமைச்சு மருந்தாளர்களுக்கு (பாமசிஸ்ட்) புதிய சம்பளத திட்டமொன்றை அறிவித்துள் ளது.

இதன்படி இவ்வருடம் ஜன வரி மாதம் தொடக்கம் இவர் கள் அதிகரிக்கப்பட்ட சம்பள உயர்வை பெறுவார்கள்.

இதுபற்றிய சுற்று நிருபம்

[4ம் பக்கம் பார்க்க]

நாட்டுவோம் நன் மரங்களை
நாடுவோம் நற் பயன்களை

## வரி விளம்பரம்

### வல்லாரைக் குளிகை

இயற்கை வல்லாரைச் சாற்றில் தயாரித்த GOTU KOLA Capsules. கிடைக்குமிடம் எஸ். ரி. மெடிக்கல்ஸ் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி—6848]

### அனுமதிப் பரீட்சை ஆண்டு—6

பிரபல பாடசாலைகளுக்கான ஆண்டு 6 மாதிரி அனுமதித் தேர்வு 1-11-92 ஞாயிறு மு. ப. 8-00, மு. ப. 10-00 நேரங்களில் நடைபெறும். மாதிரி வகுப்புகளும் செவ், வியா, சனி, ஞாயிறு (தமிழ், கணிதம்) நடைபெறுகின்றன. எமது நிறுவனத்தால் வெளியிடப்பட்ட இப் பரீட்சைக்கேற்ற துரித மீட்டற் பயிற்சி (விடைகளுடன்) பெற்றுக் கொள்ளலாம். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி—6938]

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்புநோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சருமநோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு மூலவியாதிகள்; மூத்திரரோகங்களில் பிரபலமானவர்; சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர் சி. இராசரத்தினம் 121, 2-ம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம். (சி—6855)


## இராசி பலன்

**31-10-1992**
**சனிக்கிழமை**

**(தமிழுக்கு ஐப்பசி 15)**

ஷஷ்டி பி இ. 1-53 வரை: பூராடம் பி இ. 1-53 வரை. இராகு காலம் காலை 9.03 முதல் 10-33 வரை. சுபநேரம் மாலை 3-03 முதல் 4.33 வரை: ஸ்கந்தஷஷ்டி விரதம்.

மேடம்: பிரயாசமின்மை, தொழில் நஷ்டம், மனச் சங்கடம்.

இடபம்: வாய்த் தர்க்கம், அமைதிக்குறைவு, அலைச்சல்.

மிதுனம்: பெரியவர் ஆசி, தொழில் சிறப்பு, பணவரவு.

கடகம்: பணியாள் உதவு, நற்பணி, நண்பருதவி.

சிம்மம்: மூர்க்கத்தனம், சகோதர வெறுப்பு, குடும்பக் கவலை.

கன்னி: மாதர் பகை, தனிமைப்படல், இடையூறு.

துலாம்: சுபகாரியச்செலவு, தொழில் லாபம், பயண அனுகூலம்.

விருச்சிகம்: குடும்ப விரோதம், வீண் வம்பு, தப்பபிப்பிராயம்.

தனுசு: இல்லச் சிறப்பு, திருமணப் பேச்சு, காரிய சித்தி.

மகரம்: குடும்பஉறவில் விரிசல், மாருத நிலை, தாமத உதவி.

கும்பம்: செல்வந்தர் உறவு, இனசன வரவு, தெய்வ தரிசனம்.

மீனம்; அதிகாரிகள் உதவி, பகைவர் நட்பு, நினைத்தது கைகூடும்.

— ஜோஸ்பர்

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

மாரீசன்கூடல் கிராமிய கடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்பின் உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நவம்பர் 06-ம் திகதி காலை 10 மணிக்கு தலைவடியில் உள்ள தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.


A/L கணக்கியல் மாணவர்களுக்கு

இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தால் வெளியிடப்படும் இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் (SLAS விளக்கக் குறிப்புகளுடன் தொகுக்கப்பட்டுள்ளது. தேவையானோர் பின்வரும் கல்வி நிறுவனத்துடன் தொடர்புகொள்ளவும்.

SUPER SHINE INSTITUTE

76/2 Temple Road, Jaffna

தொகுப்பாசிரியர்:- D. SAM (எ-2548]


## வலி. வடக்கிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் விபரம் சேகரிப்பு

(உடுவில்)

வலிகாமம் வடக்கு பிரதேசத்தில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல்வேறு கிராமங்களிலும் வாழும் மக்களுக்கு உதவிகளை பெற்றுத்தர வலிகாமம் வடக்கு புனர்வாழ்வுக்கழகம் முன்வந்துள்ளது

வலிகாமம் வடக்கு பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து கஷ்டப்பட்டு வாழும் மக்களுடைய குடும்ப நிலை, தொழில் நிலை. இருப்பிடவசதிகள் போன்ற விபரங்களை புனர்வாழ்வுக்கழக வலி - வடக்கு பிரிவினர் திரட்ட உள்ளனர்.

இத்தரவுகளை அடிப்படையாகக்கொண்டு அரசாங்கத்துடன் கலந்துரையாடி அக்குடும்பங்களுக்குத் தேவையான உதவிகளை பெற்றுக் கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட உள்ளன. (109)

## குழாய் கிணறுகள் அமைக்க 19 லட்சம் ரூபாவை யாழ். மா. ச. கோரியுள்ளது

(நல்லூர்)

பத்தொன்பது லட்சத்து நாற்பத்திரண்டாயிரத்து ஐநூறு ரூபாவை யாழ். மாநகரசபை புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சிடம் கோரியுள்ளது.

கரையோரப் பகுதிகளாகிய நாவாந்துறை, பாஷையூர் கொழும்புத்துறை, குருநகர் பகுதிகளில் குடிநீர்விநியோகத்தை மேலும் முன்னேற்றி விஸ்தரிக்கவும், யாழ். மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் மேலதிகமாக இன்னும் முப்பத்தைந்து குழாய் கிணறுகளை அமைத்து மக்களுக்கு சீரான முறையில் குடிநீர் விநியோகத்தை மேற்கொள்ளவுமே மேற்படி தொகையை புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சிடம் கோரியுள்ளதாகத் தெரியவருகின்றது.

மேற்படி அமைச்சின் அங்கீகாரம் கிடைத்தவுடன் தமது நடவடிக்கைகள் ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (158)


வெளிவந்துவிட்டது

அறிவுக் களஞ்சியம்-5

226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (எ-2547]


## அம்பம் ஆஸ்பத்திரி குறைபாடுகள் பற்றி மகஜர்

(நெல்லியடி)

கரவெட்டி மத்தி அம்பம் அரசினர் ஆஸ்பத்திரின் சில குறைபாடுகள் சம்பந்தமாக மேற்படி ஆஸ்பத்திரி அபிவிருத்திச்சபையின்செயலாளர் திரு. பி. சிற்றம்பலம் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு மகஜர் மூலம் தெரிவித்துள்ளார்.

இவ் ஆஸ்பத்திரிக்கருகாமையில் வைத்திய அதிகாரி தங்குவதற்கு வசதி செய்து தரப்படல் வேண்டுமென்றும், தச்சந்தோப்பு விநாயகர் ஆலய நிர்வாக சபையினால் வைத்திய சேவை விஸ்தரிப்புக்கென ஒதுக்கப்பட்டுள்ள 18 பரப்புக் காணியில் வைத்தியருக்கும் மற்றும் மருத்துவமாது சிற்றூழியர்கள் போன்றவர்களுக்கும வீடு கட்ட ஆவன செய்ய வேண்டுமென்றும், அம்மகஜரில் கோரப்பட்டுள்ளது.(160

## குடும்ப நலத் திட்ட பரீட்சை முடிவுகள்

(திருநெல்வேலி)

குடும்ப நலத் திட்ட மாணவிகளது பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன

இப்பரீட்சைக்குத் தோற்றிய மாணவிகளில் பெரும்பாலானோர் சித்தியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பரீட்சையில் சித்தி அடைந்தவர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம் வழங்கப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்கான பரீட்சைப் பெறுபேறுகள், கொழும்பில் இருந்து சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (157)

## மாவீரர்களின் பெற்றோர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு மாதாந்தம் நடைபெற்று வரும் மாவீரர் வீரவணக்க நிகழ்வுகளை முன்னிட்டும் தமிழீழ மாவீரர்களுடைய பெற்றோர்களின் இருப்பிடங்களை அறிய விரும்புகின்றோம் இன்றைய இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து வாழ்ந்து வரும், மாவீரர் குடும்பங்கள் தங்கள் அயலிலுள்ள எமது பணிமனைகளிலோ அல்லது மாவீரர் மணிமனைகளிலோ தங்கள் இருப்பிடங்களை அறியத்தருமாறு தமிழீழ மாவீரர் பணிமனை தங்களை விநயமாக வேண்டுகிறது.

## வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம்
## 1993ம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

01-01-1993 தொடக்கம் 31-12-1993 வரையிலான காலப் பகுதிக்குள் கீழ்க் குறிக்கப்படும் விடயங்களுக்கு, கேள்விகள் இரு பிரதிகளில் 23-11-1992ம் திகதி முற்பகல் 10-00 மணி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

| கேள்வி விபரம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்புப் பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|---|
| 1. மரக்கறிச் சந்தை, வல்வெட்டித்துறை | 36,300-00 | 1000-00 | 100-00 |
| 2. மீன் சந்தை, வல்வெட்டித்துறை | 30,910-00 | 1000-00 | 100-00 |
| 3. மாட்டிறைச்சிக் கடை, வல்வெட்டித்துறை | 24,400-00 | 1000-00 | 100 00 |
| 4. துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் (மரக்கறிச் சந்தை, வல்வெட்டித்துறை) | 8,000-00 | 250-00 | 50-00 |
| 5. துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் (மீன் சந்தை, வல்வெட்டித்துறை) | 4,000-00 | 250-00 | 50-00 |
| சேவை | | | |
| குப்பை கூழங்களை அகற்றுவதற்கு உழவு இயந்திரப் பெட்டி வாடகைக்கு வழங்குதல் | | 100-00 | 50 00 |

மேற்படி வைப்புப் பணமும், கேள்விப் படிவக் கட்டணங்களும் செலுத்தப்படுவதன் பேரில் 20-11-1992ந் திகதி நண்பகல் 12-30 மணி வரை வழங்கப்படும் படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கேள்விப் படிவக் கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டாது. மேற்படி கட்டணங்கள் இவ்வலுவலகத்தில் பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

ந ஞானவேல்
செயலாளர்,
நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை.

நகராட்சி மன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை, 28-10-1992. [ஏ 2549]

## தெய்வீகப் பேருரைகள்

(யாழ்ப்பாணம்)

கந்த சஷ்டியை முன்னிட்டு நெல்லியடி தடங்கன்புளியடி முருகமூர்த்தி கோவிலில் தெய்வீகத் தொடர் விரிவுரைகள் நடைபெறுகின்றன.

இன்று மாலை 4-30 மணி தொடக்கம் 6-00 மணி வரையும், நாளை 7-00மணி முதல் 9-00 மணி வரையும் அகில இலங்கைக் கம்பன் கழக அமைப்பாளர் திரு இ. ஜெயராஜ், 'கந்தர் அநுபூதி' என்னும் பொருள் பற்றி விரிவுரை நிகழ்த்துவார். (சு)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

தாவடி ஸ்ரீ அம்பலவாண கந்தசுவாமி கோவில் கந்த சஷ்டி விழாவை முன்னிட்டு காரைநகர் கம்பன் கழக அமைப்பாளர் திரு. த. சிவகுமாரனின் தொடர் சொற்பொழிவில், இன்று 'உதயமும் அஸ்தமனமும்' என்னும் பொருள் பற்றியும், நாளை 'ஸ்ரீவள்ளி திருமணம்' எனும் பொருள்பற்றிய சொற்பொழிவும் இடம் பெறும்.

## விளையாட்டு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினர் நடாத்திய பாலர்களுக்கான விளையாட்டுப் போட்டி கடந்த 25-ம் திகதி பிற்பகல் கழக மைதானத்தில் நடைபெற்றது

கழகத் தலைவர் திரு. சி. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற மேற்படி விளையாட்டுப் போட்டியில் நீர்வேலி வடக்கு கிராமசேவை அலுவலர் திரு. சி. தவராசா, கோப்பாய் வட்ட வைப் பொறுப்பாளர் சேரன் (தராசு) உட்பட பல பிரமுகர்கள், பொதுமக்கள் ஆகியோர் பெருமளவில் கலந்து கொண்டனர். (க)

### ★ பயணிகள் படகுகளை நோக்கி

# கிளாலி கடலில் படையினர் தொடர்ந்து பீரங்கி தாக்குதல்

[யாழ்ப்பாணம்]

கிளாலி கடற்பரப்பில் பயணம் செய்துகொண்டிருந்த பயணிகள்படகுகள்மீதுநேற்று முன்தினம் கடற்படையினர் தொடர்ச்சியான தாக்குதல்களை மேற்கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

நள்ளிரவு 12 மணிக்குப் பின்னர் பல படகுகள் கிளாலியிலிருந்தும் ஆலங்கேணியிலிருந்தும் வந்துகொண்டிருந்தவேளையில் கடற்படைப் பீரங்கிப் படகுகளில் பூநகரி ஆனையிறவு பிராந்தியத்திலிருந்துவந்த கடற்படையினர் பயணிகள் படகுகளை நோக்கி கடுமையான துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டிருந்தனர்.

எனினும் பயணிகள் படகுகள் படையினரின் தாக்குதலுக்குள்ளாகாதநிலையில் உயிர் தப்பி வந்தனர். சிலமணி நேரம் இடைநிறுத்தப்பட்ட சேவை கடற்படையினரின் நடமாட்டம் குறைந்ததையடுத்து மீண்டும் ஆரம்பமாகியது.

இதேவேளை கிளாலிக்கு வருவதற்காக பெருந்தொகையான பயணிகள் காத்திருப்பதாகவும் அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

இவ்வாறான தாக்குதல் சம்பவங்கள் அடுத்தடுத்து இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது. (56-157)

### அருள்பெற்றுய்ந்தான்

தீயவை புரிந்தா ரேனுங் குமரவேள் திருமுன் உற்றால்
தூயவ ராகி மேலைத் தொல்கதி அடைவர் என்கை
ஆயவும் வேண்டுங் கொல்லோ அடுசமர் இந்நாட் செய்த
மாயையின் மகனும் அன்றோ வரம்பிலா அருள்பெற் றுய்ந்தான்

(கந்தபுராணம்)

(இன்று சூரன் போர் உற்சவம்)

## சித்திரத்தேர்

(கொழும்புத்துறை)

மாத்தளை அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலயத்துக்கு 25 லட்சம் ரூபா செலவில் 27 அடி உயரமான சித்திரத்தேர் அமைக்கும்பணி சிறப்பாக ஆரம்பமாகவிருக்கிறது என ஆலய பரிபாலன சபையின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

1983ம் ஆண்டு வன்செயலின் போது எரிக்கப்பட்ட சித்திரத் தேருக்குப் பதிலாக இப் புதியதேரை அமைப்பதென்று முத்துமாரி அம்மன் ஆலய நிர்வாகம் முடிவு செய்துள்ளது. (154)

# சிறந்த திரைப்படமாக 'சின்னத்தம்பி' தெரிவு

(சென்னை)

1990ம் ஆண்டிற்கான தமிழக அரசின் சிறந்த படத்திற்கான விருது 'சின்னத்தம்பி' திரைப்படத்திற்கு கிடைத்துள்ளது.

தமிழக அரசின் 6 பரிசுகளையும் இத்திரைப்படம் பெற்றுள்ளது.

சிறந்த நடிக, நடிகையருக்கான விருது இப்படத்தில் நடித்த பிரபு, குஷ்பு ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இப்படத்தை இயக்கிய பி. வாசு சிறந்தஇயக்குநருக்கான விருதினைப்பெறுகிறார்.

சிறந்த நடிகர்களுக்கான சிறப்பு விருது பானுப்பிரியாவும், சிறந்த இசையமைப்பாளர் விருதினை மரகதமணியும் பெறுகின்றனர்.

1991ம் ஆண்டு சிறந்த திரைப்படங்கள் வரிசையில் 'புதுவசந்தம்' முதலாவதாகவும் 'கேளடி கண்மணி' இரண்டாவதாகவும் 'கிழக்கு வாசல்' மூன்றாவது இடத்தையும் பெறுகிறது.

சிறந்த நடிகராக கார்த்திக்கும், சிறந்த நடிகையாக ரேவதியும் சிறப்பு நடிகராக

(4-ம் பக்கம் பார்க்க)

# முன்னாள் பிரதமர் 'தகா'வின் முருக பக்தி

(கொழும்பு)

"கதிர்காமகந்தனை நான் வணங்கி வருவதனாலேயே எவ்விதநோயும் இன்றி இவ்வயதிலும் திடகாத்திரமாக உள்ளேன்".

இவ்வாறு அண்மையில் 90 வது பிறந்த தினத்தை தனது இல்லத்தில் கொண்டாடிய முன்னாள் பிரதமரும் கல்வி அமைச்சருமான கலாநிதி டபிள்யூ தகநாயக்கா தெரிவித்துள்ளார்.

நான் அடிக்கடி கதிர்காம முருகனை வணங்கும் வழக்கம் உடையவன் என்றும் அவர் தெரிவித்தார். (சு-க)

# 'தடா சட்டம்' சட்டரீதியானதா? வீரமணி வழக்குத் தாக்கல்

(சென்னை)

தடா சட்டம் சட்ட ரீதியாக செல்லுபடியாகுமா? என்பது குறித்து திராவிடர் கழகச் செயலாளர் வீரமணி தாக்கல் செய்த வழக்கை ஏற்றுக்கொண்ட நீதிபதி ஸ்ரீனிவாசன் மத்திய உள்துறை செயலாளருக்கும் தமிழ்நாடு உள்துறை செயலாளருக்கும் நோட்டீஸ் அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

கிரிமினல் சட்டத்தின் அடிப்படைக் கோட்பாட்டை இந்தச் சட்டம் மீறுகிறது என்று வீரமணி சென்னை உயர் நீதிமன்றத்தில்வாதாடியபோதே, மேற்கண்ட உத்தரவை நீதிபதி பிறப்பித்துள்ளார் எனத் தெரியவருகின்றது.

தற்போது தடா சட்டத்தின்கீழ் தமிழக சிறைகளில் இலங்கையர்கள் உட்பட ஆயிரக்கணக்கானோர் விசாரணை ஏதுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளதும் தெரிந்ததே. (சு-சி)

# விவசாயிகளுக்கு உரம் விநியோகம்

(பண்டத்தரிப்பு)

உடுவில் கமநல சேவைநிலையத்தில் விவசாயிகளுக்குத் தேவையான அமோனியா உரமும் பி.I. பொட்டாஸ் ஆகிய உரவகைகளும் குறைக்கப்பட்ட சகாய விலைகளில் விநியோகிக்கப்பட்டு வருகின்றது

விவசாயிகளின் விவசாய அடையாள அட்டைக்கு இந்த உரங்கள் விநியோகிக்கப்படுவதாகவும் விவசாய அட்டை பெறுநவர்களான விவசாயிகள் தங்களது தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பித்து இவற்றைப் பெறமுடியுமென்றும் இது பற்றி தெரிவிக்கப்படுகின்றது. (72)

## தங்கத்தின் விலை உயர்வு

(கொழும்பு)

தங்க உலோகத்தின் விலை உயர்ந்துள்ளது என்று அறிவிக்கப்படுகின்றது.

இதுவரை ஒரு பவுண் தங்க நாணயம் 4,900 ரூபாவாக விற்கப்பட்டது. தற்போது சந்தையில் 4925 ரூபாவாக உயர்ந்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதே நேரம் உலகச் சந்தையில் தங்க விற்பனையில் துபாய் நாடு முக்கிய இடத்தைப் பெறுகின்றது. (சு)

# காரைநகர் — திருமலை கப்பல்சேவைக்கு கோரிக்கை

(கொழும்பு)

காரைநகரிலிருந்து திருகோணமலைக்கு பயணிகள் கப்பல் சேவை ஒன்றை ஆரம்பிக்குமாறு பிரதமர் டி. பி. விஜேதுங்காவிடம் ஊர்காவற்துறையில் நடந்த கூட்டத்தில் கோரிக்கை விடப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன

பருத்தித்துறையில் இருந்து திருகோணமலைக்கு ஒரு கப்பல் சேவை ஆரம்பிக்கப்படும்

(4-ம் பக்கம் பார்க்க)

# வீரப்பனை பிடிக்க சிறப்பு அதிரடிப் படை

[சென்னை]

சந்தனக் கடத்தல்காரன் வீரப்பனைக் கண்டுபிடிப்பதற்கு தமிழ்நாடு அரசு பொலிஸ் சுப்பிரிண்டன் தலைமையில் சிறப்பு அதிரடிப்படைப் பிரிவு ஒன்றை ஆரம்பித்துள்ளது.

ஐம்பது அறுபது காவலர்களை கொண்டிருக்கும் இப் பிரிவுக்கு வாகனங்கள், ஆயுதங்கள் விசேடமாக வழங்கப் படவுள்ளது.

இவர்கள் பெரியார், சேலம், தர்மபுரி மாவட்டங்களில் உலாவும் வீரப்பனை கண்டு பிடிப்பதே முக்கிய நோக்கம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (சு)

# தீயபழக்கங்கள் பலவற்றுக்கு இராணுவத்தினர் அடிமை

[கொழும்பு]

ஸ்ரீலங்கா இராணுவத்தில் மது அருந்துதல், புகைப் பிடித்தல் போன்ற பழக்கங்களுக்கு நீண்டகாலமாக கடமையாற்றும் படையினர் அடிமையாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் ஸ்ரீலங்கா இராணுவத்தில் இத்தீய பழக்கங்களின் விளைவை பெருமளவினர் உணர்ந்திருப்பதாகவும் இதற்கு அடிமையாவோரின் தொகை செய்திகளில் குறிப்பிட்டது போலன்றி குறைவான விகிதத்திலேயே இருப்பதாக கேர்ணல் சரத் முனசிங்கா தெரிவித்தார்.

மேலும் இராணுவத்திலிருந்து தப்பியோடுவோர் தொகை மாதத்திற்கு மாதம் குறைந்துவருவதாகவும் அவர் தெரிவித்தார். (சு-சி)

## வடமராட்சி கிழக்கில் காட்டு மரங்களை வெட்டுவதற்கு தடை

(புலோலி)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் காட்டு மரங்களை விறகுக்காக வெட்டுவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும், வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திலிருந்து பெருமளவு விறகை எடுத்துச் செல்லும் விறகு வியாபாரிகள், இப்பிரதேசத்திலுள்ள இறப்புக்கண்டல் உட்படப் பல்வேறு காட்டுமரங்களை வெட்டிச் செல்வதைத் தொடர்ந்தே இத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்தில் விறகு வெட்டுவோர் பட்ட மரங்களையே வெட்டவேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. (61)

## அனுமதி பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் ஆண்டு 6க்கான அனுமதிப் பரீட்சை நவம்பர் மாதம் 14ம் திகதி நடைபெறவுள்ளது. விண்ணப்ப முடிவு திகதி நவம்பர் 4ம் திகதியாகும். (சு)

# தபால் பரிவர்த்தனை நிலையம் திருடர்களின் குகை

(கொழும்பு)

மத்திய தபால்பரிவர்த்தனை நிலையம் திருடர்களின் குகை என தபால் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பரிவர்த்தனை நிலையத்துக்கு வந்துசேரும் உள்நாட்டு, வெளிநாட்டு தபால் பொதிகளிலிருந்து அடிக்கடி திருட்டுக்கள் இடம் பெறுவது ஒரு சர்வசாதாரண நிகழ்வாகிவிட்டதென்றும் மேலும் செய்திகள் தெரிவிக்கின்றன. (சு)

## மன்னார் படை முகாம்களிலிருந்து

# தொடர்ச்சியான ஷெல் தாக்கு

(யாழ்ப்பாணம்)

மன்னார் மாவட்டத்திலுள்ள படை முகாம்களிலிருந்து படையினர் தொடர்ச்சியான ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த திங்களன்று மன்னார் உயிலங்குளத்தில் விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதல்களை அடுத்து, மாந்தை, தள்ளாடி முகாம்களிலிருந்து இரவு பகல்வேளைகளிலேயே படையினர் ஷெல் தாக்குதல்களை நடத்தி வருகின்றனராம்.

மாந்தையில் நிலைகொண்டிருக்கும் படையினர் நேற்று வரை காட்டுப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டு வருவதனால், காட்டுப் பகுதியிலுள்ள மிருகங்கள் இறந்துள்ளதாகவும், காடுகள் சேதமடைந்து வருவதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (56)

# முஸ்லிம் காங்கிரஸ் மீது சபாநாயகர் கண்டனம்

(கொழும்பு)

ஏனைய சமூகங்களோடு சேர்ந்து வாழ்ந்தால்தான் முஸ்லீம்கள் உரிமைகளைப் பெறலாமென்று சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். எம். முகமட் கொழும்பில் நடைபெற்ற கூட்டம்ஒன்றில் தெரிவித்துள்ளார்.

தற்போது முஸ்லிம் காங்கிரஸ் சில சமூகத்தினருக்கு எதிராகச் செயற்படுவதால் வருங்காலத்தில் இனங்களுக்கிடையில் மேலும் விரிசல்கள் ஏற்படலாம் என்பதனாலேயே மொகமட் மேற்கண்டவாறு பேசியுள்ளதாக அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (சு)

## மூதூர் பகுதியிலுள்ள தமிழ்கிராமங்களுக்கு உணவுப் பொருள்கள் எடுத்து செல்ல தடை

(மட்டுநகர்)

மட்டக்களப்பு, மூதூர் பகுதியில் உள்ள தமிழ் கிராமங்களுக்கு மருந்து, மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்களை கொண்டுசெல்வதற்கு இராணுவம் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

மூதூரில் உள்ள கட்டப்பறிச்சான், சேனையூர் கட்டப்பறிச்சேனை, சம்பூர், கூனித்தீவு, இலகந்தை, வீரமாநகர், பாட்டாளிபுரம் ஆகிய தமிழ் கிராமங்களில் உள்ள மக்கள் அரிசி, மா, சீனி உட்பட அத்தியாவசியப் பொருட்களை மட்டுப்படுத்திய அளவுக்கு மட்டுமே கொண்டு செல்லவேண்டும் என்றும், கிழமையில் ஒரு தடவை மட்டுமே இப்பொருட்களை வெளியிலிருந்து வாங்கிக் கொண்டுசெல்லமுடியுமென்று இராணுவம் கட்டுப்பாடு விதித்துள்ளது.

இதேநேரம் மேற்படி கிராமங்களுக்கு மருந்துவகைகளை கொண்டுசெல்வதற்கு படையினர் முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. [வி]

## தென்மராட்சியில் இன்று மீட்பு நிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மீட்புநிதி இன்று சனிக்கிழமை விடுதலைப்புலிகளின் நிதித்துறையினரால் சாவகச்சேரி, பச்சிலைப்பள்ளி உதவி அரச அதிபர்கள் பிரிவில் சேகரிக்கப்படவுள்ளது.

சாவகச்சேரி மக்களிடம் இன்று காலை 9 மணி தொடக்கம் 10 மணிவரை கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயத்திலும், முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் 12-30 மணிவரை சாவகச்சேரி மகளிர் கல்லூரியிலும், பி. பகல் 2 மணி தொடக்கம் 4 மணிவரை கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் பச்சிலைப்பள்ளி மக்களிடமும் நிதிசேகரிக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. (வி)

## வடக்கு கிழக்கில் யுத்த நடவடிக்கைகளில் 1,50,000 படையினர்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கின் யுத்த முனைகளில் ஒரு லட்சத்து 50 ஆயிரம்படையினர் நேரடியுத்த நடவடிக்கைகளில் தற்போது ஈடுபட்டுள்ளனர்.

அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா இவ்வாறு நாடாளுமன்றத்தில் அண்மையில் தெரிவித்தார்.

இதன்போது ஸ்ரீலங்கா சுதந்திரகட்சி அங்கத்தவரான திரு. கே. பி. இரத்நாயக்கா குறுக்கிட்டு, புலிகளின் தாக்குதல்களுக்கு இலக்காகும் பகுதிகளில் ரோந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதா எனக் கேள்வி எழுப்பினர்.

அதற்கு அமைச்சர் விக்கிரமசிங்கா இதனை தாம் கவனத்தில் எடுத்துக் கொள்வதாகத் தெரிவித்தார்.

## கரிநாள்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

டாரநாயக்கா மாவத்தையில் இடம்பெற்ற தாக்குதல் மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக 10 பேர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 15பவுண் கொள்ளை நகைகள் மீட்கப்பட்டுள்ளதாகவும் இச் சம்பவங்கள் தொடர்பாக மேலும் இரு சந்தேக நபர்கள் பொலிசாரால் தேடப்பட்டு வருவதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

மேலும் கொழும்பு மத்திய வீதியில் 7 பேரை புறக்கோட்டைப் பொலிசார் இச்சம்பவங்கள் தொடர்பாக அண்மையில் கைதுசெய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (க)

## பட்டதாரிகள் கவனத்திற்கு

[கொழும்பு]

"வடக்கு-கிழக்கில் வேலைவாய்ப்பு இல்லாதிருக்கும் பட்டதாரிகள் உடனடியாக கொள்கைதிட்டமிடல் அமைச்சின் வேலைவாய்ப்பு பணியகத்தில் தமது பெயர், மற்றும் விபரங்களை பதிவுசெய்து கொள்ளுமாறு அமைச்சின் பணிப்பாளர் பி இராமனுஜம் கேட்டுக்கொண்டுள்ளார். (க)

## ராணுவத்தின்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

னத்துடனும் நடந்துகொள்ள வேண்டும என்று தமிழீழ விடுதலைப்புலிகள் முக்கிய பிரமுகர் பொற்கோ தெரிவித்தார்

நேற்று கோண்டாவிலிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஏற்கனவே வவுனியா இராணுவத்தினரால் திட்டமிட்டு சிவனு, திருமதி இராசமணி ஆகியோரிடம் கொடுத்துவிடப்பட்ட வெடிக்கவைக்கும் அமுக்க கண்ணிவெடி பத்திரிகையாளர்களுக்கு காண்பிக்கப்பட்டது.

இரண்டு பொலித்தீன் பைகளில் ஐந்து கிலோ எடைகொண்ட "சி4" என்ற அதிஉயர்சக்தி வெடிமருந்தும் கிறீம் கிருக்கர் பிஸ்கட் பக்கட்டினுள் நடுவே குடைந்து சந்தேகம் கொள்ளாது வைக்கப்பட்ட வங்கியும் (பூஸ்டர்) மின்சாரக் கெற்பும், ஸ்பிறிங்கில் இயங்கும் அமுக்க மரப்பெட்டி, இரண்டு சிறிய பட்டரிகள் ஆகியவை காண்பிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் பற்றி விபரிக்கையில் அவர் மேலும் கூறியதாவது: முதலில் சிவனு (வயது-42), இராசமணி (வயது-42) ஆகியோரை ஸ்ரீலங்கா இராணுவம் அணுகி அமுக்க கண்ணிவெடி தருகிறோம். அதை ஓமந்தை சேமமடுவில் புதைக்குமாறு கேட்டனர் இதைக்கேள்விப்பட்ட அந்த இருவரும் எம்மிடம் அணுகி அனுமதி கேட்டார்கள். இதை எமமால் நம்ப முடியவில்லை. எனினும் இராணுவம் தந்தால் வாங்கி வரும்படி கூறினோம். அவர்கள் உரபாக்குள் மாவினுள் மறைக்கப்பட்டுக் கொண்டு வந்து எம்மிடம் கையளித்தார்கள்.

இந்த அமுக்கக் கண்ணிவெடியை வெடிக்கவைப்பதற்கு வவுனியா ஜோசப் முகாமில் இவர்களுக்கு ஒருநாள் பயிற்சியும வழங்கப்பட்டது

மேலும் வெடிக்க வைக்கும் சில பொருட்கள் குடாநாட்டுக்குள் வந்துள்ளதாக தகவல் கிடைத்துள்ளது. பொதுமக்கள் இவைகளைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

இதனால் தமிழீழ விடுதலைப் புலிகளாகிய நாங்கள் சோதனைகள் அதிகப்படுத்தவேண்டியுவளது. பொதுமக்கள இதனால் ஏற்படும் அசௌகரியங்களை பெரிதாக எண்ணாது ஒத்துழைப்புடன் நடந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம். இதற்கு முன்பு இதுபோன்ற சம்பவம் தான் கொம்படியில் ஏற்பட்டது" என்றார். (சு)





ஸ்ரீலங்கா இராணுவத்தின் நாசகாரத் திட்டத்தை புலிகளிடம் வெளிப்படுத்திய ஓமந்தையைச் சேர்ந்த சிவனு கந்தசாமியும் (வயது 42), பல்லவராயன்கட்டைச் சேர்ந்த நவரத்தினம் இராசமணியும் மேலேஉள்ள படத்தில் காணப்படுகின்றனர்.

## பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்

கைதடி இணுங்கித்தோட்டம் அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் தேவஸ்தான நாதஸ்வர வித்துவான் அ. சின்னத்துரையின் ஆலய நாதஸ்வர சேவை நிறைவுப் பாராட்டுவிழா இன்று இரவு 8 மணிக்கு நடைபெறவுள்ளது. (சு)

## ராஜினாமா?

[யாழ்ப்பாணம்]

நேற்றுமுன்தினம் யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் மேற்கொண்ட மறியல் போராட்டத்தைத் தொடர்ந்து மருத்துவபீடாதிபதி பேராசிரியர் பாலசுப்பிரமணியம் உப-வேந்தருக்கு தமது ராஜினாமா கடிதத்தை அனுப்பியுள்ளதாகத் தெரிய வருகிறது. (159)

## வலி. மேற்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன. இதேவேளையில் அன்றிரவு மாதகல் இராணுவ முகாமிலிருந்தும் பண்டத்தரிப்பு பகுதியைநோக்கி அடிக்கடி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. (72-159)

## சிங்கள மீனவர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ங்கள வானொலி நேற்றிரவு அறிவித்தது.

மேற்படி மூன்று மீனவர்களும் கடந்த செவ்வாய்க்கிழமை 27ம் திகதி தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கொழும்பிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் திரு. டொமினிக் டிபோல் கூறியுள்ளார். (வி)

## சிறந்த

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சத்யராஜும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். சிறந்த நடிகைக்கான சிறப்புப்பரிசு கௌதமிக்கு வழங்கப்படுகிறது. [க]

## காரைநகர்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

என்று கடந்த காலங்களில் கூறிவந்த போதிலும் இந்த சேவைபற்றி இதுவரை மௌனம் சாதிக்கப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (சு)

## மருந்தாளருக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று யாழ்.சுகாதார திணைக்களம் உட்பட நாட்டிலுள்ள சகல பிராந்திய சுகாதார பணிமனைகளுக்கும் கடந்த வாரம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (72)

## குறிப்பிட்ட

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கோரிக்கை வழங்கப்படுமேயானால் நாடு எங்கு போய்விடும் என்று சொல்லத் தேவையில்லை.

பொலநறுவ எல்லைக் கிராமங்களில் அண்மையில் இடம் பெற்ற முஸ்லிம்கள் கொலைச் சம்பவத்தையடுத்து முஸ்லிம்கள் தம்மைத்தாமே பாதுகாப்பதற்கு முஸ்லிம்களுக்கென தனியான இராணுவப் படை தேவையென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் எம். எச். எப். அஷ்ரப் கோரிக்கை விடுத்ததைத் தொடர்ந்தே இந்தக் கருத்தை அவர் வெளியிட்டதாகக் கூறப்படுகிறது. (க)

## ராவ்-தமிழ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சியல் கட்சிகளிடையே தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் கொந்தளிப்பே பிரதமர் நரசிம்மராவின் தமிழ்நாட்டு விஜயம் ரத்துச் செய்யப்படுவதற்கு முக்கிய காரணமென்று கூறப்படுகின்றது.

சென்னையில் நிறுவப்பட்டுள்ள முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியின் சிலையை திறந்துவைப்பதற்கு பிரதமர் சென்னைவர இருந்தது குறிப்பிடத்தக்கது. (வி)

## புனித யுத்தத்துக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தல் உலாமா இதற்கு அங்கீகாரம் வழங்கியதுமே அனைத்து முஸ்லிம்களும் இந்தப் புனித யுத்தத்தில் ஈடுபடுவதற்கு கடமைப்பட்டுள்ளனர்.

அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம. எச். எம். அஷ்ரப் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கரிநாள் பிரசார நடவடிக்கையின் போது ஜனாப் அஷ்ரப் மேலும் தெரிவித்ததாவது:

புனித யுத்தத்தைப் பிரகடனப்படுத்தவேண்டிய நடவடிக்கை மாத்திரமே பாக்கியாக உள்ளது. ஜமியாதும் உலாமாவின் அங்கீகாரம் கிடைத்ததுமே புனிதயுத்தம் ஆரம்பமாகிவிடும்.

எனினும் இன்றைய நிலையில் இத்தகைய ஒரு புனித யுத்தத்துக்கு தாக்குப்பிடிக்கக்கூடிய வல்லமை இலங்கைக்கு இப்போது கிடையாது என்றார்.

## மகளிர் பொற்கணக்கு

(யாழ்ப்பாணம்)

"மகளிர் பொற்கணக்கு முதலாவது சீட்டிழுப்பில் கலந்து கொள்வதற்கு கணக்கினைத் திறக்கும் கடைசிநாள் இன்று என்பதால் வாடிக்கையாளர் நலன்கருதி யாழ். மாவட்டத்திலுள்ள இலங்கை வங்கி சகல கிளைகளும் இன்று கணக்கினைத் திறப்பதற்காக விசேடமாகச் செயலாற்றும் என இலங்கைவங்கியின் யாழ் மாவட்ட முகாமையாளர் அறிவித்துள்ளார்.

## எதிர்வரும்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தேவையான அமைப்பு விதிகளைத் தயாரிப்பதில் லலித் கட்சி தெரிவித்த ஆலோசனைகளை ஏனைய கட்சிகள் நிராகரித்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

லலித் கட்சியைத் தவிர ஏனைய எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் அண்மையில் ஒன்றுகூடி இந்த முன்னணியின் அமைப்பு விதிகள் குறித்து விரிவாக ஆராய்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

## படை அதிகாரிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வித்தார்.

அவர்மேலும் பேசுகையில் கூறியதாவது: அரசாங்கம் இன்று தேவையற்ற செலவுகளையும், கேளிக்கைகளையும் நடத்தி வருகிறது.

இந்தப் பணத்தை எல்லைப் பகுதிகளிலுள்ள கிராமங்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக செலவுசெய்யலாம் என்றார்.

சுதந்திரக்கட்சியின் மற்றொரு அங்கத்தவரான திரு. ஆனந்த தஸநாயக்கா பேசுகையில்;

வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு பூரண சுயாட்சி வழங்கப்படவேண்டுமென அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்குப் பகுதிகள் தமிழரின் பாரம்பரிய பிரதேசங்கள் எனவும் திரு. தொண்டமான் தெரிவித்துள்ளார். இப்படியான ஒருவரை எப்படி அமைச்சரவையில் வைத்திருப்பதா? எனக் கேட்டார்.

அதற்கு அரசு தரப்பு எம். பி.கள் அமைச்சர் தொண்டமான் அரசுக்கு ஆலோசனை மாத்திரமே தெரிவித்துள்ளார் என்றனர்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1992ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post office, Sri Lanka under Licence Number B / 10336 / 81